<u>முதல் கூடுதல் மாவட்ட நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.</u>

முன்னிலை - திருமதி.எஸ்.எழில், எம்.எல்.,

முதல் கூடுதல் மாவட்ட நீதிபதி,

2026 ம் வருடம் ஏப்ரல் மாதம் 08 ம்நாள் புதன்கிழமை

(திருவள்ளுவராண்டு 2057-ஸ்ரீ விசுவாவசு வருடம்- பங்குனி திங்கள் 25 ம்நாள்)

<u>நிறைவேற்று இடைநிலை மனு எண்.1/2026</u>
<u>நிறைவேற்று மனு எண்.14/2025</u>
அசல் வழக்கு எண்.24/2015

1. ஷாகினா
2. இஷான்
3. இசால்
4. காஜா உசேன் (இறந்துவிட்டார்)

.. மனுதாரர்கள்/எதிர்மனுதாரர்கள்
தீர்ப்பு கடனாளிகள்/பிரதிவாதிகள்

// எதிர் //

ஒய்.பி.லெதர்ஸ்
இதற்காக இதன் உரிமையாளர் ஏ.யுவராஜ்

.. எதிர்மனுதாரர்/மனுதாரர்
தீர்ப்பாணை பெற்றவர்/
வாதிகள்

03.03.2026 ம் தேதியிட்ட இம்மனு உ.வி.மு.ச. கட்டளை 21, விதி 106 மற்றும் பிரிவு 151 ன்படி மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டு, மேற்படி நிறைவேற்று மனு எண்.14/2025 ல் கடந்த 20.02.2026 ம் தேதியில், 1 முதல் 3 மனுதாரர்களுக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்து, இம்மனுவுடன் தாக்கல் செய்துள்ள எதிருரையை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கோரப்பட்டுள்ளது.

இம்மனு இந்நீதிமன்றத்தின் முன்பாக 24.03.2026 ம் தேதி இறுதியாக விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, மனுதாரர்கள் தரப்பில் திரு.பி.முத்துசரவணன், வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் திரு.பி.டி.சசிகுமார், வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு தரப்பு வாதுரைகளைக் கேட்டும், இதுநாள்வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து மனு கோப்பைப் பரிசீலனை செய்து, இன்று இந்நீதிமன்றம் வழங்கும்:

<u>உத்தரவு</u>

மேற்படி நிறைவேற்று மனு எண்.14/2025 ல் கடந்த 20.02.2026 ம் தேதியில், 1 முதல் 3 மனுதாரர்களுக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்து, இம்மனுவுடன் தாக்கல் செய்துள்ள எதிருரையை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கோரி மனுதாரர்களால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. <u>மனு உரையின் சுருக்கம்:</u>

மனுதாரர்கள் மேற்படி நிறைவேற்று மனுவில் தீர்ப்பு கடனாளிகள் ஆவார்கள். எதிர்மனுதாரர் தாவா சொத்தின் பேரில் பற்றுகை செய்ய கோரியும், பின்னிட்டு சொத்தை விற்பனை செய்து கொடுக்க கோரியும் மேற்படி நிறைவேற்று மனுவை தாக்கல் செய்துள்ளார். மேற்படி நிறைவேற்று மனுவில் மனுதாரர்கள் தரப்பில் நல்ல எதிர்வாதம் உள்ளது. 20.02.2026 ம் தேதியில் மேற்படி நிறைவேற்று மனுவில் எதிருரை தாக்கல் செய்ய வாய்தா போடப்பட்டதில் 1 ம் மனுதாரருக்கு உடல்நிலை சரியில்லாமல் போனதால் வழக்கறிஞரை தொடர்பு கொள்ளவில்லை. மனுதாரர்கள் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யாததால் அவர்களுக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு அன்றைய தினமே பிறப்பிக்கப்பட்டுள்ளது. உடனே இம்மனுதாரர் தனது வழக்கறிஞரை தொடர்பு கொண்டு தேவையான தகவல்களை தந்து எதிருரை தயார் செய்யப்பட்டது. 20.02.2026 ம் தேதியன்று மனுதாரரின் ஆஜரின்மை வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல. மேற்படி நிறைவேற்று மனுவில் மனுதாரர்கள் தரப்பில் எதிர்வாதம் செய்ய வாய்ப்பு வழங்கப்பட வேண்டும். எனவே மனுதாரர்களுக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட மேற்படி ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்து இம்மனுவுடன் தாக்கல் செய்துள்ள எதிருரையை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று சொல்லப்பட்டு இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. <u>எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்உரையின் சுருக்கம்:</u>

இந்த மனு சட்டப்படி செல்லத்தக்கதல்ல. இந்த எதிர்மனுதாரரால் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ள சங்கதிகளைத் தவிர மற்றவற்றை மனுதாரர்களே

நிரூபிக்க கடமைப்பட்டவர்கள். இந்த எதிர்மனுதாரர் தரப்பில் சொல்லப்படுவது யாதெனில், 1ம் மனுதாரருக்கு உடல்நலம் சரியில்லை என்பதும், அதனால் வழக்கறிஞரை தொடர்பு கொள்ள இயலவில்லை என்று சொல்வது தவறு. உடல்நலம் சரியில்லை என்பதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை. அ.வ.எண்.24/2015 லிலும் இந்த மனுதாரர்கள் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய 3655 நாட்கள் காலதாமதம் ஏற்படுத்தியிருந்தார்கள். அந்த மனுவிலும் இதே காரணத்தை சொல்லியிருந்தார்கள். அதில் இந்த எதிர்மனுதாரர் தரப்பில் கடுமையான ஆட்சேபணை செய்யப்பட்டது. அதே காரணத்தை சொல்லி இம்மனுவை தாக்கல் செய்துள்ளனர். இம்மனுவில் போதுமான காரணம் சொல்லப்படாத காரணத்தினால் இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும். மனுதாரருக்கு எந்த தேதியில் இருந்து உடல்நலம் சரியில்லை, என்ன சிகிச்சை எடுத்துக் கொண்டார் என்பதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை. மேற்படி நிறைவேற்றுகை மனு நடவடிக்கைகளை காலதாமதப்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தில் மனுதாரர்கள் இம்மனுவை தாக்கல் செய்துள்ளனர். எனவே இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும்.

4. இந்த மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே இந்த மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினையாகும்.

5. <u>பிரச்சினைக்குத் தீர்வு:-</u>

இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. மனு கோப்பு பரிசீலிக்கப்பட்டது. மேற்படி அசல் வழக்கு எண்.24/2015 ல் தீர்ப்பு தொகை கோரி தாக்கல் செய்யப்பட்டதில் மேற்படி தொகையை வசூலிக்க மனு சொத்தை பற்றுகை செய்து அதை ஏலத்தில் விட்டு தொகை வசூலித்து கொள்ள மேற்படி நிறைவேற்று மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர்கள் தரப்பில் 20.02.2026ம் தேதியில் மேற்படி நிறைவேற்று மனுவில் எதிருரை தாக்கல் செய்ய வாய்தா போடப்பட்டதில் 1ம் மனுதாரருக்கு உடல்நிலை சரியில்லாமல் போனதால் வழக்கறிஞரை தொடர்பு கொள்ளவில்லை என்றும், எதிருரை தாக்கல் செய்யாததால் தங்களுக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு அன்றைய தினமே பிறப்பிக்கப்பட்டதாகவும், 20.02.2026ம் தேதியன்று மனுதாரரின் ஆஜரின்மை வேண்டுமென்றே

ஏற்பட்டதல்ல என்றும், மேற்படி நிறைவேற்று மனுவில் மனுதாரர்கள் தரப்பில் எதிர்வாதம் செய்ய வாய்ப்பு வழங்கப்பட வேண்டும் என்றும், அதனால் தங்களுக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட மேற்படி ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்து இம்மனுவுடன் தாக்கல் செய்துள்ள எதிருரையை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று சொல்லப்பட்டுள்ளது.

6. எதிர்மனுதாரர் தரப்பில் 1ம் மனுதாரருக்கு எந்த தேதியில் இருந்து உடல்நலம் சரியில்லை, என்ன சிகிச்சை எடுத்துக் கொண்டார் என்பதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றும், மேற்படி நிறைவேற்றுகை மனு நடவடிக்கைகளை காலதாமதப்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தில் மனுதாரர்கள் இம்மனுவை தாக்கல் செய்துள்ளதாக ஆட்சேபணை செய்யப்பட்டுள்ளது.

7. தற்போதைய காலகட்டத்தில் செல்போன் அனைவரிடமும் உள்ள நிலையில் 1ம் மனுதாரருக்கு உடல்நலம் சரியில்லாமல் போன போது வழக்கறிஞரை தொடர்பு கொள்ள இயலவில்லை என்று கூறுவது ஏற்கத்தக்கதல்ல. 1ம் மனுதாரருக்கு எந்த தேதியில் இருந்து உடல்நலம் சரியில்லை, என்ன சிகிச்சை எடுத்துக் கொண்டார் என்பதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை. இருப்பினும் மனுதாரர்களுக்கு அவர்களது எதிர்வாதத்தை நிரூபிக்கும் பொருட்டு அவர்களுக்கு ஒரு வாய்ப்பு வழங்க வேண்டுமென்பதால் நிபந்தனையின் பேரில் இம்மனுவை அனுமதிக்கலாம் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து மேற்படி பிரச்சினைக்கு தீர்வு காண்கிறது.

**முடிவாக,** மனுதாரர்கள், எதிர்மனுதாரருக்கு செலவு தொகையாக ரூ.3,000/-ஐ வருகின்ற 16.04.2026ம் தேதிக்குள் நேரடியாக செலுத்தும்பட்சத்தில் இம்மனு அனுமதிக்கப்படும் என்றும், தவறினால் தள்ளுபடி செய்யப்படும் என்றும் உத்தரவிடப்படுகிறது. மீண்டும் அழைக்க 16.04.2026.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு ஒலிவடிவில் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு,

என்னால் சரிபார்க்கப்பட்டு, இன்று 2026 ம் வருடம் ஏப்ரல் மாதம் 08 ம்நாள் அவையறிய திறந்த இந்நீதிமன்றத்தில் பகரப்பட்டது.

S EZHIL Digitally signed by S EZHIL Date: 2026.04.08 19:04:43 +0530

முதல் கூடுதல் மாவட்ட நீதிபதி,
ஈரோடு

<u>சாட்சிய சான்றாவணப் பட்டியல்</u>
(..இருதரப்பில் தாக்கல் இல்லை ..)

S EZHIL Digitally signed by S EZHIL Date: 2026.04.08 19:04:51 +0530

மு.கூ.மா.நீ., ஈரோடு.

<u>அசல்/வரைவு உத்தரவு</u>
<u>நி.இ.ம.எண்.1/2026</u>
<u>நி.ம.எண்.14/2025</u>
அ.வ..எண்.24/2025
நாள் 08.04.2026
மு..கூ.மா.நீ.ம., ஈரோடு.